**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 28** **நாள்: 06.02.2025**

**தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-44க்குட்பட்ட பகுதிகளில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், புதிய திட்டப்பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்து, நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-44க்குட்பட்ட பகுதிகளில் புதிய திட்டப்பணியினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்து, நடைபெற்று வரும் பள்ளிக் கட்டடம் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு மேயர் அவர்கள், வார்டு-44க்குட்பட்ட பாடசாலை தெரு, கக்கன்ஜி காலனியில் மாண்புமிகு மேயர் மேம்பாட்டு நிதியில் ரூ.50 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்படவுள்ள இரவு பாடசாலை மையம் மற்றும் மாணவர் திறன் மேம்பாட்டு மையக் கட்டடத்திற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, பெரம்பூர், புதிய காமராஜர் நகர் சென்னை நடுநிலைப்பள்ளியில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் ரூ.4.59 கோடி மதிப்பில் தரைத்தளத்துடன் மூன்று தளங்கள் மற்றும் 2 குழந்தை மையங்களுக்கான கூடுதல் பள்ளிக் கட்டடக் கட்டுமானப் பணியினையும், மூலதன நிதியில் ரூ.86 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுச்சுவர் கட்டுமானம் மற்றும் மறுசீரமைப்புப் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, வார்டு-44 மற்றும் 71க்குட்பட்ட மேல்பட்டி பொன்னப்பன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்ட நிதியில் ரூ.2.13 கோடி மதிப்பில் 635 மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு மேயர் அவர்கள் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளில், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.சேகர், வடக்கு வட்டார துணை ஆணையாளர் (பொ) திரு.கே. ஜெ. பிரவீன் குமார், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (வரிவிதிப்பு (ம) நிதி) திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன், மண்டலக்குழுத் தலைவர் திரு.நேதாஜி யு. கணேசன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**